பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**25 03 2026** **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** சிறிய நகரங்களுக்கு விமான சேவை வழங்க வகை செய்யும் உடான் திட்டத்தை மேலும் பத்தாண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**2.** மேற்காசியாவில் நிலவும் சூழல் குறித்து, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில் இன்று விவாதிக்கப்பட்டது.

**3.** நாடு முழுவதும் உர விநியோகம் சீராக நடைபெற்று வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**4.** அமெரிக்காவுடன் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என்று ஈரான் தெளிவுபடுத்தியுள்ளது.

**5.** ஆசிய சைக்கிள் சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

உடான் திட்டத்தை அடுத்த பத்தாண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் 28 ஆயிரத்து 840 கோடி ரூபாய் செலவில் மாற்றியமைக்கப்பட்டு இந்த உடான் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக கூறினார்.

நாடு முழுவதும் 100 விமான நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களின் பொருளாதாரம், சுற்றுலா மற்றும் வர்த்தகம் இதன்மூலம் மேம்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொலைதூர கிராமங்களுக்கு அவசரகால மருத்துவ சேவைகளை வழங்குவதற்கும் இது உதவிகரமாக இருக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

குடியேற்றம், விசா, வெளிநாட்டை சேர்ந்தவர்களுக்கான பதிவு மற்றும் கண்காணிப்புத் திட்டத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்கவும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

ஆயிரத்து 800 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உடான் திட்டத்தை மேலும் பத்தாண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்று உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், சிறிய நகரங்களுக்கான விமான சேவைக்கு இந்த திட்டம் உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பயணத்திற்கு இது மேலும் வலுசேர்க்கும் என்றும் திரு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

மேற்காசியாவில் நிலவும் சூழல் குறித்து விவாதிப்பதற்காக மத்திய அரசு அழைப்பு விடுத்த அனைத்துக்கட்சி கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், மேற்காசியாவில் நிலவும் சூழல் குறித்தும், அங்கு வசிக்கும் இந்தியர்களின் பாதுகாப்பு குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் திரு அமித் ஷா, திரு ஜெய்சங்கர், திரு ஹர்தீப் சிங் புரி, திரு கிரண் ரிஜிஜூ, ஐக்கிய ஜனதாதள கட்சியின் செயல் தலைவர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் திரு முகுல் வாஸ்னிக், திரு தாரிக் அன்வர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திரு ஜான் பிரிட்டாஸ், சமாஜ்வாதி கட்சியின் திரு தர்மேந்திர யாதவ் மற்றும் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>>

மத்திய பட்ஜெட்டில் நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் சிறு-குறு தொழில்துறையினர் பயன்பெறுவதற்கான பல்வேறு அம்சங்கள்

இடம்பெற்றுள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் நிதி மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

மத்திய அரசு கட்டாயத்தின்பேரில் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று அவர் தெளிவுபடுத்தினார்.

உரிய திட்டமிடுதலுடன் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாட்டில் உரத்தட்டுப்பாடு ஏதும் இல்லை என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் கோரக்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உர விநியோகம் சீராக நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

எந்தவொரு பிரச்சினையையும் எதிர்கொள்ளும் திறன் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசுக்கு உள்ளதாக அவர் கூறினார்.

விவசாயிகளின் நலனுக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

குஜராத் சட்டப்பேரவையில் பொது சிவில் சட்டம் நிறைவேற்றப்பட்டதற்காக அம்மாநில முதலமைச்சர் திரு பூபேந்திர பாட்டீலுக்கு, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த மசோதாவிற்கு ஆதரவு அளித்த சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

நாட்டு மக்கள் அனைவரும் ஒரே மாதிரியான சட்டத்தை பின்பற்ற வேண்டும் என்பதே பிஜேபி-யின் நிலைப்பாடு என்றும் திரு அமித் ஷா அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

நாட்டின் கலாச்சாரத்தை பாதுகாப்பதிலும், பாரம்பரிய இசைகளை பிரபலப்படுத்துவதிலும் மத்திய அரசு கூடுதல் கவனம் செலுத்தி

வருவதாக கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் கலாச்சாரத்துறை, யூ டியூப் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

நமது பாரம்பரிய இசைக்கலைஞர்களுக்கு சர்வதேச அளவிலான வாய்ப்பை ஏற்படுத்தித்தரும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

செயற்கை நுண்ணறிவு இயக்கத்தின்கீழ், 190 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், 10 ஆயிரத்து 372 கோடி ரூபாய் செலவில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மேம்பாட்டிற்காக இந்த இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பெட்ரோலியப் பொருட்கள் தட்டுப்பாடு என பரப்பப்படும் வதந்திகளை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத்துறை இணைச்செயலர் திருமதி சுஜாதா சர்மா, பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படுவதாக வெளியான தகவல்களும் தவறானது என்று கூறினார்.

குழாய் மூலம் சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

குழாய் மூலம் சமையல் எரிவாயு இணைப்பு, கடந்த 25 நாட்களில் மட்டும் இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர் சமையல் எரிவாயு சிலிண்டரிலிருந்து, குழாய் மூலம் சமையல் எரிவாயு பெறுவதற்கு மாறியுள்ளதாகவும் திருமதி சுஜாதா சர்மா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சட்டீஸ்கரில் **18** நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

ஜக்தல்பூரில் காவல்துறை அதிகாரிகள் முன் இவர்கள் சரணடைந்தனர்.

இதில் ஏழு பேர் பெண்கள் என்று காவல்துறையினர் தெரிவித்தனர்.

தங்களிடமிருந்த ஆயுதங்களையும் அவர்கள் காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

<<<<<<>>>>>>

சரஸ்வதி சம்மான் விருது வங்காள எழுத்தாளர் ராம்குமார் மொஹோபாத்யாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டிற்கான இந்த விருது அவர் எழுதிய **Hara Parbati Katha** நாவலுக்கு வழங்கப்படுகிறது.

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் இளையோரின் திறன் மேம்பாட்டிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக துணைநிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா கூறியுள்ளார்.

இன்று ஜம்முவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், புத்தொழில் தொடங்க இளையோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதற்கு உரிய பயிற்சியை ஜம்மு காஷ்மீர் அரசு வழங்கி வருவதாகவும் திரு மனோஜ் சின்ஹா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

அமெரிக்காவுடன் எவ்வித பேச்சுக்களும் நடைபெறவில்லை என்று ஈரான் கூறியுள்ளது.

இதற்குமுன் நடைபெற்ற பேச்சுக்களில் முடிவு எட்டப்படுவதற்குமுன் அமெரிக்கா தாக்குதலை நடத்தியதாக ஈரான் குறை கூறியுள்ளது. இதற்கிடையே ஈரான் மீதான தாக்குதல் தொடரும் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

ஆப்கானிஸ்தானின் மீது பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில், இரண்டு பேர் உயிரிழந்தனர், **8** பேர் காயமடைந்தனர்.

**Kunar** மாகாணத்துக்கு உட்பட்ட பகுதிகளை குறிவைத்து பாகிஸ்தான் இந்த தாக்குதலை நடத்தியதாக ஆப்கானிஸ்தான் தெரிவித்துள்ளது.

இதற்கு ஆப்கானிஸ்தான் படைகள் உரிய பதிலடி கொடுத்ததாகவும், இதில் பாகிஸ்தானின் மூன்று ராணுவ நிலைகள் அழிக்கப்பட்டதாகவும் ஆப்கான் அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய சைக்கிள் சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

பிலிப்பைன்சில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஜூனியர் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

-------------

ஸ்பெயின் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Manisha Patel** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-9, 21-6** என்ற செட் கணக்கில், பிரேசிலின் **Maria Eduarda**-வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் சுகந்த் கடம் மூன்றாவது சுற்றுக்கும், **Hardik Makkar** இரண்டாவது சுற்றுக்கும் முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் பிரமோத் பகத் - மணிஷா ராமதாஸ் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

-------------

ஹாக்கி சம்மேளனத்தின் கடந்த ஆண்டுக்கான சிறந்த ஆட்டக்காரர் விருதுக்கு இந்தியாவின் ஹர்திக் சிங் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

---------

வியட்நாம் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரித்விக் சஞ்ஜீவி சத்தீஷ்குமார் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர் **21-13, 21-16** என்ற செட் கணக்கில், சீன தைபே-யின் **Kuo Kuan Lin**-ஐ வென்றார்.

இப்பிரிவில் **Pranay Shettigar** -ரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

மகளிர் பிரிவில் ரக்ஷிதா ஸ்ரீ, மான்சி சிங், ஸ்ரேயா **Lele** ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Lakshita Jaglan — Mohit Jaglan** இணை-யும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---

ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

பாங்காக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Rithi** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Prathamesh Jawakar** மற்றும் **Rajat Chauhan** அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

**<<<<<<END>>>>>>**